©
GOVERNMENT OF TAMIL NADU
2015

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price : Rs. 6.40 Paise.

TAMIL NADU GOVERNMENT GAZETTE

EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 37] CHENNAI, WEDNESDAY, FEBRUARY 18, 2015
Maasi 6, Jaya, Thiruvalluvar Aandu – 2046

Part III—Section 1(a)

General Statutory Rules, Notifications, Orders, Regulations, etc., issued by Secretariat Departments.

NOTIFICATIONS BY GOVERNMENT

RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ DEPARTMENT

TAMIL NADU PANCHAYATS (REGULATION OF SINKING OF WELLS AND SAFETY MEASURES) RULES, 2015

[G.O.Ms. No.26, Rural Development and Panchayat Raj (SGS-3), 18th February 2015.]

No. SRO A-3(a)/2015.

NOTIFICATION-I

Under sub-section (2) of Section 1 of the Tamil Nadu Panchayats (Amendment) Act, 2014 (Tamil Nadu Act, 22 of 2014), the Governor of Tamil Nadu hereby appoints the 18th of February 2015 as the date on which the said Act shall come into force.

NOTIFICATION-II

In exercise of the powers conferred by sections 143-A and 143-B read with section 242 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994), the Governor of Tamil Nadu hereby makes the following Rules:-

RULES

1. Short title, extent and commencement:– 1) These rules may be called the Tamil Nadu Panchayats (Regulation of Sinking of Wells and Safety Measures) Rules, 2015.

2) They shall apply to the whole of the areas which come under the purview of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994), excluding the revenue villages specified in the Schedule to the Chennai Metropolitan Area Groundwater (Regulation) Act, 1987 (Tamil Nadu Act 27 of 1987).

3) They shall apply to sinking of new wells as well as rehabilitation and deepening of wells.

4) They shall come into force at once.

***2. Definitions*:** – In these rules, unless the context otherwise requires,–

(a) "Act" means the Tamil Nadu Panchayats Act,1994 (Tamil Nadu Act 21 of 1994);

(b) "Executive Authority" means the President of the Village Panchayat;

(c) "permit" means a permit granted in Form-B for sinking, deepening or rehabilitation of a well;

(d) "Certificate of Registration" means a certificate of registration granted in Form-F to carry the business of sinking deepening or rehabilitation of wells.

3. Grant of Permit: *(1)* Every application for grant of permit shall be made to the Executive Authority in Form A and shall be accompanied by a fee of Rs.5,000/- (Rupees five thousand only), by means of a Demand Draft.

(2) The Executive Authority shall examine the application and may grant the permit in Form-B, subject to such conditions as may be specified therein, within thirty days from the date of receipt of the application.

(3) Where the Executive Authority has decided to refuse the grant of permit, he shall intimate the decision to the applicant along with the reasons for such refusal, in writing, within thirty days from the date of receipt of the application.

(4) The Executive Authority shall maintain a register in Form-C containing the particulars regarding the grant of permits by him.

(5) The Executive Authority shall send a monthly report in Form-D to the District Collector along with an extract of entries made in the register referred in sub-rule (4) during the relevant month.

4. Grant of Certificate of Registration: (1) Every application for grant of Certificate of Registration shall be made to the District Collector concerned in Form E and shall be accompanied by a fee of Rs.15,000/-(Rupees fifteen thousands only), by means of a Demand Draft.

(2) The District Collector shall examine the application and may grant the Certificate of Registration in Form-F subject to such conditions as may be specified therein, within forty five days from the date of receipt of the application.

(3) Where the District Collector has decided to refuse to grant Certificate of Registration, he shall intimate the decision to the applicant along with the reasons for such refusal, in writing, within forty five days from the date of receipt of the application.

(4) The District Collector shall maintain a register in Form-G containing the particulars regarding the grant of Certificates of Registration by him.

5. Appeal:- (1) Any person aggrieved by the decision of the Executive Authority under rule 3 or sub-rule (1) of rule 7 shall file an appeal, in writing, to the District Collector concerned within fifteen days from the date of receipt of such decision and the orders of the District Collector on the appeal shall be final.

(2) Any person aggrieved by the decision of the District Collector under rule 4 or sub-rule (2) of rule 7 shall file an appeal, in writing, to the Government within sixty days from the date of receipt of such decision and the orders of the Government on the appeal shall be final.

6. Safety Measures: (1) Every holder of the permit or owner of a well in use or disuse, shall, while sinking, deepening or rehabilitation of a well; shall:

(a) ensure that the person executing the work has followed all the safety measures prescribed in sub-rule (2):

(b) verify that the person executing the work has a valid Certificate of Registration granted under these rules;

(c) ensure that the well is not left uncovered during recess or cessation of work;

(d) fill up abandoned wells upto the ground level using clay, sand, boulder or any other suitable materials.

(2) Every person carrying on the business of sinking wells, while sinking, deepening or rehabilitation of a well, shall-,

(a) before commencing the work-,

(i) ensure that necessary permit in Form-B has been obtained by the owner of the well for executing the work;

(ii) erect warning signboards in a conspicuous manner at the site of the well, displaying the nature, width and depth of the well, his name, address and contact details and that of the owner of the well;

(iii) erect barbed wire fencing or any other suitable barrier around the site of the well;

(iv) construct a cement or concrete platform measuring 0.5X0.5X0.6 metre around the well casing in such a manner that it is 0.3 meter above the ground level and 0.3 metre below the ground level;

(b) not leave the drilling pit or the well uncovered during the recess of work;

Verified RedEstate

(c) after completion of the work-,

(i) fill up the mud pits and channels around the well;

(ii) restore the ground conditions;

(iii) cap the well assembly by welding steel plates or by providing a strong cap to the casing pipe with bolts and nuts.

(3) where it appears to the Executive Authority that the safety measures are insufficient in the case of any well, then he may by notice, in writing, require the owner or the person executing the work to undertake such other safety measures and the same shall be complied with.

7. Cancellation of permit and Certificate of Registration: (1) In case of violation of any of the conditions of the permit, the Executive Authority may cancel the permit after giving an opportunity of hearing to the holder of the permit.

(2) In case of violation of any of the conditions of the Certificate of Registration, the District Collector may cancel the Certificate of Registration, after giving an opportunity of hearing to the holder of such certificate.

FORM – A

[See sub-rule (1) of rule 3 of the Tamil Nadu Panchayats (Regulation of Sinking of Wells and safety measures) Rules, 2015.]

APPLICATION FOR GRANT OF PERMIT

From

Thiru/Tmt/Selvi. (Name of the Applicant),
S/O, W/O, D/O.
(Address)

To

The Executive Authority,

…….. Village Panchayat.

Sir,

I, Thiru./Tmt./Selvi……..(Name) residing at ……(address of the individual) intend to sink / deepen / rehabilitate a well (open well/bore well/tube well) in the land bearing Survey No…….. owned by me / by. . . . . (Land owner Name and address) in ———— (habitation) in ———— Village Panchayat, the details of which are given below.

I request you to kindly grant me a permit to sink/ deepen/rehabilitate the well. I enclose herewith a Demand Draft for Rs……. (Rupees ……. only) towards the fee.

Details of the well:

1.	Type of well	:	Open well / Borewell/tubewell/Dug-well / Dug-cum-Borewell
2.	Purpose of well	:	Agricultural/Industrial/Commercial/Others (Specify the exact nature of the purpose)
3.	Diameter and Depth of the well (in metres)	:	
4.	Nearest places	:	Schools/hospitals/temples/markets/other places where people assemble generally.
5.	Distance between the well site and the place mentioned in item 4 (in metres)	:	
6.	Whether the entrance to the well is protected by / compound wall / fencing / barricades, etc.	:	

Verified RealEstate™

7.	Nature of the soil	:	Clay / sand / others (specify)
8.	Name of the person / agency / firm going to execute the work	:	
9.	Address and contact details of the person / agency / firm executing the work	:	
10.	Whether the person / agency / firm going to execute the work possesses a valid certificate of Registration granted in Form F. If yes, enclose a copy of the Certificate of Registration.	:	Yes / No

DECLARATION

(1) I. . . . . hereby declare that the above particulars are true to the best of my knowledge.

(2) I also undertake that,

(i) I will not begin the work until the grant of permit by the Executive Authority.

(ii) I will follow the safety measures prescribed in sub rule (1) of rule 6 of the Tamil Nadu Panchayats (Regulation of Sinking of Wells and Safety Measures) Rules, 2015.

(iii) I will keep the site of well open at all times for inspection of the Executive Authority or any other higher authority authorized by the District Collector.

(iv) I will furnish any information which may be required by the Executive Authority for the grant of permit and also while executing the work.

Place: *Signature of the Applicant.*

Date:

FORM-B

(See sub-rule (2) of rule 3 of the Tamil Nadu Panchayats (Regulation of Sinking of Wells and safety measures) Rules, 2015)

PERMIT FOR SINKING WELL

Thiru. / Thirumathi / Selvi ..... son /wife/ daughter of ..... residing at ..... is hereby granted permit for sinking / deepening / rehabilitating a well in ..... in plot / R.S. No. ..... in ..... Village Panchayat/Panchayat Union.....District for the purpose of agriculture / Hotel / Industry / Commercial / Irrigation/ Horticulture/ . . . . . (other use).

This permit is granted for a well conforming to the specifications given below:

(1) Type of well .... Dug-well / Dug-cum-borewell/Borewell / Open-well/Tube-well.

(2) Diameter .... metres.

(3) Depth .... metres.

Verified RealEstate™

CONDITIONS

Every holder of the permit, shall, while sinking, deepening or rehabilitating a well:-

(a) ensure that the person executing the work has followed all the safety measures prescribed in sub-rule (2) of Rule 6 of the Tamil Nadu Panchayats (Regulation of Sinking of Wells and Safety Measures) Rules, 2015.

(b) verify that the person executing the work has a valid Certificate of Registration granted in Form-F;

(c) ensure that the well is not left uncovered during recess or cessation of work;

(d) fill up abandoned wells upto the ground level using clay, sand, boulder or any other suitable materials;

(e) ensure that a signboard is erected near the site of the well displaying his name, address and contact details and that of the person executing the work;

(f) ensure that the well conforms to the specifications such as depth, diameter specified above;

(g) fill up the mud pits and channels after completion of the work;

(h) fill up abandoned wells by clay/ sand / boulders / pebbles / drill cuttings etc., from bottom to ground level.

(i) on completion of the work, restore the ground conditions;

(j) any other conditions (to be specified)

Place: *Signature of the Executive Authority.*

Date:

FORM-C

(See sub-rule (4) of rule 3 of the Tamil Nadu Panchayats (Regulation of Sinking of Wells and safety measures) Rules, 2015

Register of grant of permit for sinking of wells

Name of the Rural Local Body

Sl.No	*Name of the applicant with address*	*Date of application for permit*	*Nature of the well (Whether borewell / tube well / open well*	*Diameter and depth (in metres)*	*Date of grant of permit*	*Name of the person executing the work*	*Whether work has been completed (Yes / No)*	*If yes, whether the well is in use (Yes / No)*	*If the work is completed / the well not put into use whether capping of well has been properly done (Yes/No)*	*Remarks*
(1)	*(2)*	*(3)*	*(4)*	*(5)*	*(6)*	*(7)*	*(8)*	*(9)*	*(10)*	*(11)*

Executive Authority.

Verified RealEstate™

FORM-D

(See sub-rule (5) of rule 3 of the Tamilnadu Panchayats (Regulation of Sinking of Wells and safety measures) Rules, 2015

Monthly Report on Grant of permit for the month of ……..

Name of the Village Panchayat:

Sl.No.	*No. of applications received for granting permission for sinking /* deepening rehabilitating the *well during the month*	*No. of applications accepted and permit granted*	*No. of applications rejected*
(1)	*(2)*	*(3)*	*(4)*

Signature of Executive Authority.

FORM-E

(See sub-rule (1) of rule 4 of the Tamilnadu Panchayats (Regulation of Sinking of Wells and safety measures) Rules, 2015

Application for Certificate of Registration

From
Thiru./Tmt./Selvi. …….. . . . . (Name of the Applicant)
S/o., W/o., D/o.,
Address:

To
The District Collector,
……..District.

Sir,

We / I, M/s…….. having office at……. (address of the applicant) intend to carry on the business of sinking wells.

I request that a Certificate of Registration may be granted to me / us to carry on the said business.

I enclose herewith a Demand Draft for Rs.. . . . . ./-(Rupees . . . . . only) towards the fee.

Place:

Date: *Signature of the applicant.*

Verified RealEstate™

DECLARATION

(1) I / We, hereby declare the above particulars are true to the best of my knowledge.

(2) I agree not to sink a well until the permit to do that work is granted in Form B.

(3) I agree to follow the safety measures prescribed in sub rule (2) of rule 6 of the Tamil Nadu Panchayats (Regulation of Sinking of Wells and Safety Measures) Rules 2015.

(4) I agree to stop further progress of work if the Executive Authority instructs accordingly.

(5) I agree that if there is any violation of conditions during the work, the District Collector can cancel the certificate of registration.

(6) I agree to furnish further information which may be required for issue of Certificate of Registration.

FORM – F

(see sub-rule (2) of rule 4 of the Tamil Nadu Panchayats (Regulation of Sinking of Wells and safety measures) Rules, 2015

Certificate of Registration

Certificate No……..

Thiru./Tmt./Selvi/Messer's…… Son/Wife/daughter of ……..residing at ……..is hereby granted Certificate of Registration for sinking well in ……. District.

CONDITIONS

Every person holding this Certificate of Registration, shall-,

(1) before commencing the work:

(a) ensure that necessary permit in Form-B has been obtained by the owner of the well for executing the work;

(b) erect warning signboards in a conspicuous manner at the site of the well displaying the nature, width and depth of the well, his name, address and contact details and that of the owner of the well;

(c) erect barbed wire fencing or any other suitable barrier around the site of the well;

(d) construct a cement or concrete platform measuring 0.5X0.5X0.6 metre around the well casing in such a manner that it is 0:3 meter above the ground level and 0.3 meter below the ground level;

(2) not left the drilling pit or the wall uncovered during the recess of work:

(3) after completion of the work-,

(a) fill up the mud pits and channels around the well;

(b) restore the ground conditions;

(c) cap the well assembly by welding steel plates or by providing a strong cap to the casing pipe with bolts and nuts.

(4) not deviate in any way from the specifications regarding well mentioned in the permit;

(5) not interfere with the normal activities of the locality nor while executing the work nor shall cause any traffic hazard;

(6) Any other condition (to be specified):

Place:

Date:

Signature of the District Collector.

Verified RealEstate™

FORM-G

(see sub-rule (4)of rule 4 of the Tamil Nadu Panchayats (Regulation of Sinking of Wells and safety measures) Rules, 2015)

Register of Certificate of Registration for Sinking of wells

Name of the District:

S.No.	*Name and address of the applicant*	*Date of application*	*Date of grant of Certificate of Registration*	*Certificate Number*
(1)	*(2)*	*(3)*	*(4)*	*(5)*

GAGANDEEP SINGH BEDI,
Secretary to Government.

ஏவச ளனல்ஞ்சி ர னுய் ஏவிண்சிந் •நீ ஸ

பமிள்மிணு ஏவிண்ாசிச½ (கிநனுச½ பைித்ணுளப சிஷ ர னுய் யி•சிம்மு யுஷை யிணுச½ ஃளுச்ஙுயணுந்•பவ் விதிச½, 2015

[அரசாணை (நிலை) எண் 26, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–3), 18, பிப்ரவரி 2015]

அறிவிக்கை – 1

தமிழ்நாடு 2014 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்தம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22 / 2014)–இன் பிரிவு 1 துணைப் பிரிவு 2ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் ஈங்கிதனால் 2015 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பதினெட்டாம் நாளில் இருந்து இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக அறிவிக்கிறார்.

அறிவிக்கை – 2

தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 143 உட்பிரிவு (அ) மற்றும் (ஆ) மற்றும் பிரிவு 242 (தமிழ்நாடு சட்டம் 21/1994) ஆகியவற்றின்படி தனக்களிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் பின்வரும் விதிகளை இதனால் இயற்றுகிறார்.

விதிகள்

1. **குறுந்தலைப்பு, வரம்பெல்லை மற்றும் தொடக்கம் :–**

1) இவ்விதிகள் தமிழ்நாடு ஊராட்சிகள் (கிணறுகள் தோண்டுவதற்கான மற்றும் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் ஒழுங்குபடுத்துதல்) விதிகள், 2015 என அழைக்கப்படும்.

2) இவ்விதிகள் சென்னை பெருநகர பகுதி நிலத்தடி நீர் (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1987 (தமிழ்நாடு சட்டம் பிரிவு 27/ 1987)ன் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வருவாய் கிராமங்கள் அல்லாத பகுதிகள் தவிர தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (தமிழ்நாடு சட்டம் 21 / 1994) வரம்பெல்லைக்கு உட்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் பொருந்தும்.

3) இவ்விதிகள் புதிய கிணறுகள் தோண்டுவது, ஏற்கெனவே உள்ள கிணறுகளை ஆழப்படுத்துவது மற்றும் புனரமைப்பதற்கும் பொருந்தும்.

4) இவ்விதிகள் உடனடியாக நடைமுறைக்கு வருகிறது.

2. **பொருள் வரையறை** :–

இவ்விதிகளில் சந்தர்ப்பத்திற்கேற்ப வேறு பொருள் குறித்தாலன்றி–

அ) ''சட்டம்'' என்பது தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 (தமிழ்நாடு சட்டம் 21 / 1994)

Verified RedEstate™

ஆ) "செயல் அலுவலர் " என்பவர் கிராம ஊராட்சி மன்றத் தலைவர் ஆவார்.

இ) "அனுமதி" என்பது புதிய கிணறு தோண்டுவது, ஏற்கெனவே உள்ள கிணறுகளை ஆழப்படுத்துவது மற்றும் புனரமைப்பதற்கு படிவம் ஆ–ல் வழங்கப்படும் அனுமதியாகும்.

ஈ) "பதிவுச்சான்று" என்பது கிணற்றை ஆழப்படுத்தவும் மற்றும் புனரமைக்கவும் மேற்கொள்ளப்படும் வணிக ரீதியிலான பணிக்காக படிவம் –ஊ–ல் வழங்கப்படும் பதிவுச்சான்றாகும்.

3. **அனுமதி வழங்குதல் :**

1) அனுமதி பெறுவதற்கான விண்ணப்ப படிவங்கள் அனைத்தும் படிவம் "அ"–ல் கட்டணமாக ரூபாய் 5000/–ற்கான வங்கி வரைவோலையுடன் ஊராட்சியின் செயல் அலுவலரிடம் அளிக்கப்பட வேண்டும்.

2) விண்ணப்பம் பெறப்பட்ட 30 நாட்களுக்குள், செயல் அலுவலர் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து படிவம் "ஆ"வில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் அனுமதியளிக்கலாம்.

3) செயல் அலுவலர் விண்ணப்பத்தினை தள்ளுபடி செய்ய முடிவு எடுக்கும் பட்சத்தில் உரிய காரணங்களை எழுத்து மூலமாக விண்ணப்பதாரருக்கு விண்ணப்பம் பெறப்பட்ட 30 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும்.

4) செயல் அலுவலர் படிவம் "இ"–ல் அனுமதியளித்ததற்கான விவரங்கள் அடங்கிய ஒரு பதிவேட்டினை பராமரிக்க வேண்டும்.

5) செயல் அலுவலர் துணை விதி 4–ல் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை சுருக்கமாக படிவம் "ஈ" மூலம் ஒவ்வொரு மாதமும் மாதாந்திர அறிக்கையாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பிட வேண்டும்.

4. **பதிவுச் சான்று வழங்குதல் :**

1) பதிவுச் சான்று பெறுவதற்கான விண்ணப்ப படிவங்கள் அனைத்தும் படிவம் "உ"–ல் கட்டணமாக ரூபாய் 15000/–ற்கான வங்கி வரைவோலையுடன் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அளிக்கப்பட வேண்டும்.

2) விண்ணப்பம் பெறப்பட்ட 45 நாட்களுக்குள், மாவட்ட ஆட்சித் தலைவர் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து படிவம் "ஊ"–வில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் அனுமதியளிக்கலாம்.

3) மாவட்ட ஆட்சித் தலைவர் மனுவை தள்ளுபடி செய்ய முடிவு எடுக்கும் பட்சத்தில் உரிய காரணங்களை எழுத்து மூலமாக விண்ணப்பதாரருக்கு விண்ணப்பம் பெறப்பட்ட 45 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும்.

4) மாவட்ட ஆட்சித் தலைவர் படிவம் "எ"–ல் அனுமதியளித்ததற்கான விவரங்கள் அடங்கிய ஒரு பதிவேட்டினை பராமரிக்க வேண்டும்.

5. **மேல்முறையீடு :–**

(1) விதி 3 அல்லது விதி 7ன் துணை விதி (1)–ன்படி செயல் அலுவலரின் முடிவால் பாதிக்கப்பட்டதாக கருதும் விண்ணப்பதாரர் எழுத்து மூலமாக அம்முடிவு குறித்த உத்தரவு பெற்ற 15 நாட்களுக்குள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மேல்முறையீடு செய்ய வேண்டும். இம்மேல்முறையீட்டின் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவரின் முடிவே இறுதியானது.

(2) விதி 4 அல்லது விதி 7ன் துணை விதி (2)–ன்படி மாவட்ட ஆட்சித் தலைவரின் முடிவால் பாதிக்கப்பட்டதாக கருதும் விண்ணப்பதாரர் எழுத்து மூலமாக அம்முடிவு குறித்த உத்தரவு பெற்ற 60 நாட்களுக்குள் அரசுக்கு மேல்முறையீடு செய்ய வேண்டும். இம்மேல்முறையீட்டின் பேரில் அரசின் முடிவே இறுதியானது.

6. **பாதுகாப்பு முன்னேற்பாடுகள்:–**

(1) அனுமதி பெற்ற ஒவ்வொருவரும் மற்றும் பயன்பாட்டில் உள்ள அல்லது பயன்பாட்டில் இல்லாத கிணற்றின் உரிமையாளர் கிணற்றை தோண்டும்போது, ஆழப்படுத்தும்போது அல்லது புனரமைக்கும்போது:

(அ) பணிகளை மேற்கொள்ளும் நபர் துணை விதி 2–ல் வரையறுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு முன்னேற்பாடுகளை பின்பற்றுகின்றாரா என்பதை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.

(ஆ) மேற்படி பணியை மேற்கொள்கின்ற நபர் இவ்விதிகளின்படி முறையான பதிவுச் சான்று வழங்கப்பட்டவரா என சரிபார்க்க வேண்டும்.

Verified by RedEstate ™

(இ) பணி இடைவேளையின்போதும், பணி நிறுத்தப்பட்ட பின்னரும் அந்தக் கிணறு சரியான முறையில் மூடப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(ஈ) கைவிடப்பட்ட கிணறுகள் களிமண், மணல், சிறு கற்கள் மற்றும் உரிய பிற பொருட்களைக் கொண்டு தரைமட்ட அளவிற்கு நிரப்பப்பட வேண்டும்.

(2) கிணறுகளை தோண்டும், ஆழப்படுத்தும் மற்றும் புனரமைக்கும் பணிகளை மேற்கொள்ளும் தொழிலை மேற்கொள்ளும் ஒவ்வொரு நபரும்:

(அ) **பணிகளை ஆரம்பிக்கும் முன்**

(i) கிணற்றின் உரிமையாளர் படிவம் "ஆ"வில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பணிகளை செய்வதற்கான அனுமதி பெற்றுள்ளாரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(ii) கிணற்றின் வகை, ஆழம் மற்றும் குறுக்களவு, பணி மேற்கொள்பவர் மற்றும் கிணற்றின் உரிமையாளர் பெயர், முகவரி மற்றும் தொடர்பு விவரங்களையும் பணி நடக்கும் இடத்தில் கவனத்தைக் கவரும் வகையில் அறிவிப்பு பலகை மூலம் தெரிவிக்கப்பட வேண்டும்.

(iii) கிணறு தொடர்பான பணி மேற்கொள்ளும் இடத்தைச் சுற்றிலும் முள்கம்பிவேலி அல்லது தகுந்த தடுப்பு அமைக்கப்பட வேண்டும்.

(iv) 0.5 X 0.5 X 0.6 மீட்டர் அளவிலான சிமிட்டி அல்லது சிமிட்டி கற்காரையிலான தளம் நிலமட்டத்திலிருந்து 0.3 மீட்டர் மேற்புறமும், 0.3 மீட்டர் நிலத்திற்கு கீழ்புறமும் உள்ளவாறு கிணற்றைச் சுற்றிலும் கட்டப்பட வேண்டும்.

(ஆ) பணி இடைவேளையின்போது துளையிடப்பட்ட குழி அல்லது கிணறு சரியான முறையில் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) பணி முடிவுற்ற பின் :

(i) கிணற்றைச் சுற்றி உள்ள சகதி குழிகளும், கால்வாய்களும் நிரப்பி மூடப்பட வேண்டும்.

(ii) முன்பிருந்த நிலைக்கு தரைமட்ட நிலையை கொண்டு வர வேண்டும்.

(iii) கிணற்றின் மேற்புறத்தை எஃகு தகடுகளாலும், ஒன்றோடு ஒன்று இணைத்து பற்ற வைக்கப்பட்ட மூடியைக் கொண்டோ அல்லது இரும்புக் குழாயின் மேற்புறத்தை உறுதியான மூடியைக் கொண்டு மூடி திருகு மரையாணிகளைக் கொண்டு குழாயுடன் இணைத்து மூட வேண்டும்.

(3) செயல் அலுவலர் எந்த ஒரு கிணற்றின் பாதுகாப்பு முன்னேற்பாடுகளிலும் ஏதேனும் குறைபாடு இருப்பதாக கருதும்பட்சத்தில் எழுத்து மூலமான அறிவிப்பு மூலம் கிணற்றின் உரிமையாளருக்கோ அல்லது பணி மேற்கொள்ளும் நபருக்கோ இதர பாதுகாப்பு முன்னேற்பாடுகளை சரியான முறையில் செயல்படுத்த அறிவுறுத்துவார்; அவ்வறிவுரைகள் முழுமையாக பின்பற்றப்பட வேண்டும்.

7. அனுமதி மற்றும் பதிவு சான்று ரத்து

(1) அனுமதியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றை மீறும் பட்சத்தில் செயல் அலுவலர் அனுமதி பெற்றவருக்கு தன் தரப்பை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பு அளித்த பின் அனுமதியை ரத்து செய்யலாம்.

(2) பதிவுச் சான்று வழங்க விதிக்கப்பட்ட நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றை மீறும் பட்சத்தில் பதிவுச்சான்று பெற்றவருக்கு தன் தரப்பை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பு அளித்த பின் பதிவுச் சான்றை மாவட்ட ஆட்சித் தலைவர் ரத்து செய்யலாம்.

ககன்தீப்சிங் பேடி
அரசு செயலாளர்

Verified RedEstate

படிவம் –அ

தமிழ்நாடு ஊராட்சிகள் (கிணறுகள் தோண்டுவதற்கான மற்றும் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் ஒழுங்குபடுத்துதல்) விதிகள், 2015 விதி 3ல் துணை விதி (1) –னைக் காண்க.

அனுமதி வழங்குவதற்கான விண்ணப்பம்

அனுப்புநர்

திரு / திருமதி / செல்வி. (விண்ணப்பதாரரின் பெயர்)

த/பெ, க/பெ

(முகவரி)

பெறுநர்

செயல் அலுவலர் ,

.....கிராம ஊராட்சி.

அய்யா,

திரு / திருமதி / செல்வி.....(பெயர்) வசிப்பிடம் .....(விண்ணப்பதாரரின் முகவரி) புல எண்.....ல்.....குக்கிராமத்தில்.....கிராம ஊராட்சியில் எனக்கு சொந்தமான/..... (நிலத்தின் உரிமையாளர் பெயர் மற்றும் முகவரி) என்பவருக்கு சொந்தமான நிலத்தில் திறந்த வெளிக் கிணறு / ஆழ்துளைக் கிணறு/ ஆழ்குழாய்க் கிணறு தோண்ட/ ஆழப்படுத்த/புனரமைக்க அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இத்துடன் ரூ...../– (ரூபாய் .....மட்டும்) கட்டணமாக வங்கி வரைவோலை இணைத்துள்ளேன்.

கிணற்றின் விவரங்கள் :

1.	கிணற்றின் வகை	:	திறந்த கிணறு /ஆழ்துளைக் கிணறு / ஆழ்குழாய்க் கிணறு / தோண்டப்பட்ட கிணறு / தோண்டப்பட்ட ஆழ்துளைக் கிணறு
2.	கிணற்றின் பயன்பாட்டு நோக்கம்	:	விவசாயம் / தொழிற்சாலை / வணிகம் / மற்றவை (சரியான காரணத்தை குறிப்பிடவும்).
3.	கிணற்றின் குறுக்களவு மற்றும் ஆழம் (மீட்டரில்)	:	
4.	அருகிலுள்ள இடங்கள்	:	பள்ளிகள் / மருத்துவமனைகள் / கோயில்கள் / சந்தைகள் / மக்கள் கூடும் பிற பொது இடங்கள்.
5.	கலம் 4ல் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களுக்கும் கிணற்றின் அமைவிடத்திற்குமிடையே உள்ள தூரம் (மீட்டரில்)	:	
6.	கிணறு அமைவிடத்தின் நுழைவாயில் சுற்றுப்புற சுவர் / முள்வேலி / தடுப்பு ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றால் பாதுகாக்கப்பட்டிருக்கிறதா ?	:	
7.	மண்ணின் தன்மை	:	களிமண் / மணல் / மற்றவை (குறிப்பிடுக)
8.	பணி மேற்கொள்ளவிருக்கும் நபர்/முகமை/ நிறுவனம் பெயர்	:	
9.	பணி மேற்கொள்ளவிருக்கும் நபர்/முகமை/ நிறுவனத்தின் முகவரி மற்றும் தொடர்பு விவரங்கள்:		
10.	பணி மேற்கொள்ளவிருக்கும் நபர்/முகமை/ நிறுவனம் படிவம் "ஊ"-ன்படி செல்லத்தக்க பதிவுச்சான்று பெற்றுள்ளதா ? ஆம் எனில், பதிவுச் சான்றின் நகலினை இணைக்கவும்.	:	ஆம் / இல்லை

Verified RealEstate™

உறுதிமொழி

(1) .....ஆகிய நான் மேற்கூறிய விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன்.

(2) மேலும் நான் உறுதியளிப்பதாவது

(அ) செயல் அலுவலரால் எனக்கு அனுமதி வழங்கப்படும் வரையில் நான் பணியை தொடங்க மாட்டேன்.

(ஆ) விதி 6 துணை விதி (1)ன்படி பரிந்துரைக்கப்பட்ட பாதுகாப்பு முன்னேற்பாடுகளை நான் பின்பற்றுவேன்.

(இ) செயல் அலுவலர் அல்லது மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்பட்ட உயர் அலுவலர் ஆய்விற்கென குறித்த காலத்தில் நான் கிணற்றுப் பகுதியை திறந்து வைத்திருப்பேன்.

(ஈ) அனுமதி வழங்குவது குறித்தோ, பணி நடைபெறுவது குறித்தோ செயல் அலுவலரால் கோரப்படும் அனைத்து விவரங்களையும் வழங்குவேன்.

இடம் : *விண்ணப்பதாரரின் ஒப்பம்*
நாள் :

படிவம் – ஆ

தமிழ்நாடு ஊராட்சிகள் (கிணறு தோண்டுவதற்கான மற்றும் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் ஒழுங்குபடுத்துதல்) விதிகள் 2015, விதி 3ல் துணை விதி (2) –னை காண்க

கிணறு அமைப்பதற்கான அனுமதி வழங்குதல்

திரு. / திருமதி / செல்வி ..... த/பெ /க/பெ ..... வசிப்பிடம் ..... என்பவருக்கு கிணறு தோண்ட / ஆழப்படுத்த /புனரமைக்க ..... மாவட்டத்தில்,.....கிராம ஊராட்சி / ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள ..... புல எண்ணில் ..... விவசாயம் / உணவு விடுதி / தொழிற்சாலை / வணிகம் / நீர்ப்பாசனம் / தோட்டம் / (பிற காரணங்களுக்காக) அனுமதி அளிக்கப்படுகிறது.

இவ்வனுமதி கீழ்க்கண்ட வரையறைகளுக்குட்பட்ட கிணறு அமைக்க வழங்கப்படுகிறது

1) கிணற்றின் வகை : கிணறு தோண்ட / கிணறு தோண்ட மற்றும் ஆழ்துளையிட / ஆழ்துளைக் கிணறு / திறந்த வெளிக்கிணறு / ஆழ்குழாய் கிணறு

2) குறுக்களவு : மீட்டரில்

3) ஆழம் : மீட்டரில்.

நிபந்தனைகள்

கிணறு தோண்ட / ஆழப்படுத்த /புனரமைக்க அனுமதி பெற்ற ஒவ்வொருவரும் பணி மேற்கொள்ளும்போது,

(அ) பணி மேற்கொள்ளும் நபர் விதி 6ன் கீழ் உள்ள துணை விதி 2– ல் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பு முன்னேற்பாடுகளை பின்பற்றுகிறாரா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(ஆ) படிவம் ஊ–ல் அளிக்கப்பட்ட செல்லத்தக்க பதிவுச்சான்றினை பணி மேற்கொள்ளும் நபர் வைத்துள்ளாரா என்பதை சரிபார்க்க வேண்டும்.

(இ) பணி இடைவேளையின்போதும், பணி நிறுத்தப்பட்ட பின்னரும் அந்தக் கிணறு சரியான முறையில் மூடப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(ஈ) கைவிடப்பட்ட கிணறுகள் களிமண், மணல், சிறு கற்கள் மற்றும் உரிய பிற பொருட்களைக் கொண்டு தரைமட்ட அளவிற்கு நிரப்பப்பட வேண்டும்.

(உ) கிணற்றின் வகை, ஆழம் மற்றும் குறுக்களவு, பணி மேற்கொள்பவர் மற்றும் கிணற்றின் உரிமையாளர் பெயர், முகவரி மற்றும் தொடர்பு விவரங்களையும் பணி நடக்கும் இடத்தில் கவனத்தைக் கவரும் வகையில் அறிவிப்பு பலகை மூலம் தெரிவிக்கப்பட வேண்டும்.

(ஊ) கிணறு தோண்ட வழங்கப்பட்ட அனுமதியில் குறிப்பிட்டுள்ள அளவுகளான ஆழம், குறுக்களவு ஆகியவற்றின்படி மட்டுமே கிணறு தோண்டப்படுகிறதா என்பதை நன்கு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(எ) கிணற்றைச் சுற்றி உள்ள சகதி குழிகளும், கால்வாய்களும் நிரப்பி மூடப்பட வேண்டும்.

(ஏ) கைவிடப்பட்ட கிணறுகள் களிமண், மணல், சிறு கற்கள், கூழாங்கற்கள், தோண்டி எடுக்கப்பட்ட மண் மற்றும் உரிய பிற பொருட்களைக் கொண்டு தரைமட்ட அளவிற்கு நிரப்பப்பட வேண்டும்.

(ஐ) கிணறு தோண்டும் பணி முடிக்கப்பட்ட நிலையில் அப்பகுதி கிணறு தோண்டுவதற்கு முன்பிருந்த நிலைக்கு தரைமட்டம் வரை கொண்டு வர வேண்டும்.

(ஒ) செயல் அலுவலரால் குறிப்பிடப்படும் பிற நிபந்தனைகள்.

இடம்:
நாள்: *செயல் அலுவலரின் கையொப்பம்.*

படிவம் – இ

தமிழ்நாடு ஊராட்சிகள் (கிணறு தோண்டுவதற்கான மற்றும் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் ஒழுங்குபடுத்துதல்) விதிகள் 2015, விதி 3ல் துணை விதி 4 –னைக் காண்க

கிணறு அமைக்க அனுமதி வழங்கப்பட்டமைக்கான பதிவேடு

உள்ளாட்சி அமைப்பின் பெயர்:

வ. எண்.	விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி	அனுமதிக்கான விண்ணப்பம் அளித்த தேதி	கிணற்றின் வகை (ஆழ்துளைக் கிணறு / ஆழ்குழாய் கிணறு / திறந்த வெளிக் கிணறு)	விட்டம் மற்றும் ஆழம் (மீட்டரில்)	அனுமதி அளிக்கப்பட்ட தேதி	பணி மேற்கொள் பவரின் பெயர்	பணி முடிவுற்றதா (ஆம்/ இல்லை)	ஆம் எனில் கிணறு பயன்பாட்டில் உள்ளதா ? (ஆம்/ இல்லை)	பணி முடிவுறாத நிலையில்/ கிணறு பயன்பாட்டில் இல்லாத நிலையில் கிணற்றின் மேற்புறம் நன்கு மூடப்பட்டதா ? (ஆம்/ இல்லை)	குறிப்பு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)

செயல் அலுவலர் கையொப்பம்

படிவம் – ஈ

தமிழ்நாடு ஊராட்சிகள் (கிணறு தோண்டுவதற்கான மற்றும் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் ஒழுங்குபடுத்துதல்) விதிகள் 2015, விதி 3ல் துணை விதி (5) –னைக் காண்க

.....மாதத்தில் கிணறு அமைக்க அனுமதி வழங்கப்பட்டமைக்கான மாதாந்திர அறிக்கை.

கிராம ஊராட்சியின் பெயர்:

வ. எண்	நடப்பு மாதத்தில் கிணறு தோண்ட / ஆழ்துளையிட / புனரமைக்க பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் அனுமதியளிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	தள்ளுபடி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை
1	2	3	4

செயல் அலுவலர்

Verified RealEstate™

படிவம் – உ

தமிழ்நாடு ஊராட்சிகள் (கிணறு தோண்டுவதற்கான மற்றும் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் ஒழுங்குபடுத்துதல்) விதிகள் 2015, விதி 4ல் துணை விதி (1) –னைக் காண்க

பதிவுச் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பம்

அனுப்புநர்

திரு / திருமதி / செல்வி. (விண்ணப்பதாரரின் பெயர்)

த/பெ, க/பெ

(முகவரி)

பெறுநர்

மாவட்ட ஆட்சியர்,

.....மாவட்டம்.

ஐயா,

.....அலுவலக முகவரியில் செயல்படும் நான் / நாங்கள்/ திருவாளர்கள்..... கிணறு அமைக்கும் பணியில் ஈடுபட விழைகிறோம். மேற்குறிப்பிட்ட பணியை மேற்கொள்ள எனக்கு / எங்களுக்கு பதிவுச் சான்று அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்/ கொள்கிறோம்.

ரூ..... (ரூபாய் .....மட்டும்) வங்கி வரைவோலை மேற்படி பதிவுச் சான்றுக் கட்டணமாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இடம்:
நாள்: *விண்ணப்பதாரரின் கையொப்பம்.*

உறுதியளித்தல்

1) மேற்குறிப்பிட்ட விவரங்கள் அனைத்தும் சரியானவை என நான் / நாங்கள் உறுதியளிக்கிறோம்.

2) படிவம் 'ஆ'–வின்படி கிணறு தோண்ட அனுமதி வழங்கப்படும் வரை கிணறு தோண்டப்பட மாட்டாது என்பதற்கு சம்மதிக்கிறேன்.

3) விதி 6 துணை விதி 2–ல் குறிப்பிட்டுள்ள பாதுகாப்பு முன்னேற்பாடுகளை நான் பின்பற்ற சம்மதிக்கிறேன்.

4) செயல் அலுவலர் கிணறு அமைக்கும் பணியின்போது பணியைத் தொடராது அப்படியே உடனடியாக நிறுத்தச் சொல்லும் பட்சத்தில் அதற்கு நான் உடன்படுவேன்.

5) பணிகளை மேற்கொள்ளும்போது, உரிய நிபந்தனைகள் மீறப்படும் பட்சத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் பதிவுச் சான்றினை ரத்து செய்யக்கூடியதாக இருந்தால் அதனை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

6) பதிவுச் சான்று வழங்க கூடுதல் விவரங்கள் தேவைப்படுமானால், அவற்றை அளிக்க சம்மதிக்கிறேன்.

படிவம் – ஊ

தமிழ்நாடு ஊராட்சிகள் (கிணறு தோண்டுவதற்கான மற்றும் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் ஒழுங்குபடுத்துதல்) விதிகள் 2015, விதி 4ல் துணை விதி 2 –னைக் காண்க.

பதிவுச் சான்று

சான்று எண்.....

திரு/திருமதி/செல்வி./திருவாளர்கள்..... த/பெ / க/பெ ..... வசிப்பிடம் ..... என்பவருக்கு ..... மாவட்டத்தில் கிணறு அமைக்க பதிவுச் சான்று அளிக்கப்படுகிறது.

Verified RedEstate™

நிபந்தனைகள்

பதிவுச் சான்று பெற்ற ஒவ்வொரு நபரும்

(அ) பணி தொடங்கு முன்,

i) கிணற்றின் உரிமையாளர் படிவம் "ஆ"வில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பணிகளைச் செய்வதற்கான அனுமதி பெற்றுள்ளாரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ii) கிணற்றின் வகை, ஆழம் மற்றும் அகலம், பணி மேற்கொள்பவர் மற்றும் கிணற்றின் உரிமையாளர் பெயர், முகவரி மற்றும் தொடர்பு விவரங்களையும் பணி நடக்கும் இடத்தில் கவனத்தைக் கவரும் வகையில் அறிவிப்பு பலகை மூலம் தெரிவிக்க வேண்டும்.

iii) கிணறு தொடர்பான பணி மேற்கொள்ளும் இடத்தைச் சுற்றிலும் முள்கம்பிவேலி அல்லது தகுந்த தடுப்பு அமைக்கப்பட வேண்டும்.

iv) 0.5 X 0.5 X 0.6 மீட்டர் அளவிலான சிமிட்டி அல்லது சிமிட்டிக் கலவைத் தளம், நிலமட்டத்திலிருந்து 0.3 மீட்டர் மேற்புறமும், 0.3 மீட்டர் நிலத்திற்கு கீழ்புறமும் உள்ளவாறு கிணற்றைச் சுற்றிலும் கட்டப்பட வேண்டும்.

(ஆ) பணி இடைவேளையின்போது, துளையிடப்பட்ட குழி அல்லது கிணறு சரியான முறையில் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) பணி முடிவுற்ற பின் :

1) கிணற்றைச் சுற்றி உள்ள சகதிக் குழிகளும், கால்வாய்களும் நிரப்பி மூடப்பட வேண்டும்.

2) முன்பிருந்த நிலைக்குத் தரைமட்ட நிலையைக் கொண்டு வர வேண்டும்.

3) கிணற்றின் மேற்புறத்தை எஃகு தகடுகளாலும், ஒன்றுடன் ஒன்றோடு இணைத்து பற்ற வைக்கப்பட்ட மூடியைக் கொண்டோ அல்லது இரும்புக் குழாயின் மேற்புறத்தை உறுதியான மூடியைக் கொண்டோ மூடி திருகு மரையாணிகளைக் கொண்டு குழாயுடன் இணைத்தும் மூட வேண்டும்.

4) கிணறு அமைக்க வழங்கப்பட்ட அனுமதியில் வரையறுக்கப்பட்டுள்ளவற்றிலிருந்து ஒருபோதும் விலக மாட்டேன்.

5) பணி மேற்கொள்ளப்படும் பகுதியில் தலையிட்டு அன்றாட நடவடிக்கைகளுக்கோ, போக்குவரத்துக்கோ எந்த விதத்திலும் இடையூறு விளைவிக்க மாட்டேன்.

6) மாவட்ட ஆட்சித் தலைவரால் குறிப்பிடப்படும் பிற நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்வேன்.

இடம்:
நாள்: *மாவட்ட ஆட்சித் தலைவர் கையொப்பம்*

<u>படிவம் – எ</u>

தமிழ்நாடு ஊராட்சிகள் (கிணறு தோண்டுவதற்கான மற்றும் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் ஒழுங்குபடுத்துதல்) விதிகள் 2015, விதி 4ல் துணை விதி 4 –னைக் காண்க

கிணறு அமைக்கும் பணி மேற்கொள்வதற்கு அளிக்கப்பட்ட பதிவுச் சான்றுகள் குறித்த விவரங்கள் அடங்கிய பதிவேடு

மாவட்டத்தின் பெயர்:

வ.எண்.	விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி	விண்ணப்பித்த தேதி	பதிவுச் சான்று அனுமதி வழங்கப்பட்ட தேதி	பதிவுச் சான்று எண்
(1)	(2)	(3)	(4)	(5

ககன்தீப்சிங் பேடி
அரசு செயலாளர்.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU